மார்ச் 2020
இதழ்: 3

# இளங்கதிர்

மாதம் ஒருமுறை மலரும் MK தமிழ்ப்பள்ளி மாணவர் மின்னிதழ்



கவிச் சக்கரவர்த்தி கம்பன்

## தமிழர் விளையாட்டுகள்

- புதிய தொடர்

## குறள் இனிது!

## என்னைப் பற்றி நான்..

## தென்கச்சி கதைகள்

## மூளைக்கு வேலை

## சாதனை மனிதர்கள்

## கொரோனா - பள்ளி மாற்றங்கள்

# ஆசிரியர் பக்கம்

பதிப்பாசிரியர்:
வெங்கட்

குழு:

சுந்தர்,
அபிராமி,
கௌரி,
ரமேஷ்

வாசக அன்பர்களுக்கு வணக்கம்.

இளங்கதிர் இதழின் மூன்றாம் பதிப்பிற்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம். உங்களின் தொடர் ஊக்கங்களுக்கும் பாராட்டுகளுக்கும் கோடானுகோடி நன்றி. இந்த இதழில் உங்கள் மனதைக் கவரும் கட்டுரைகள் சில புதிதாய்ச் சேர்த்துள்ளோம். "சாதனை மனிதர்கள்" நம்மில் ஒருவரின் சாதனைகளை எடுத்தியம்புவதாக அமையும். வாசகர்கள், சாதனையாளர்களின் பயணவழி அறியவும், புதிய சாதனைகள் பல புரிய படிக்கட்டுகளாக அமையவும் இக்கட்டுரை வழிவகுக்கும் என விழைகிறோம். "தமிழர் விளையாட்டுகள்" எனும் புதிய தொடரில் ஆசிரியர் திருமதி. மீனா குமரன் மற்றும் அவர் வகுப்பு மாணவர்கள் நம் முன்னோரின் விளையாட்டுகளைப் பற்றிய விடயங்களை நமக்களிப்பர்.

Covid-19 காரணமாக பள்ளியின் செயல்பாடுகளில் அதிரடியாய் நிறைய மாற்றங்கள். தலைமை ஆசிரியரின் தகவல் அறிவிப்பினை அடுத்த பக்கத்தில் காண்க.

இதுவும், இனிவரும் காலமும் மனித குலத்திற்கே ஒரு பெருஞ்சவால். தற்போதுள்ள பெரும் தொல்லைகள் பேரிடர் ஆகாமல் காத்திடும் பொறுப்பு நம்மில் ஒவ்வொருவருக்கும் உண்டு. அரசு சொல்வதையும், மருத்துவமக்கள் சொல்வதையும் கேட்டு கவனமாய் இருப்போம். நம்மை மட்டும் எண்ணாது, நம் சுற்றத்தையும் மொத்த மனித இனத்தையும் சிந்தித்து, நம் செயல் முறைகளில் தேவையான மாற்றம் கொண்டுவரும் தருணமிது.

இறைவன் மற்றும் நல்உள்ளங்களின் ஆசிகள் நம் அனைவரையும் இந்த துன்ப காலத்திலிருந்து விரைவில் காப்பாற்ற எங்கள் பிரார்த்தனைகள். வழக்கம்போல உங்கள் அன்பும் ஆதரவும் கோருகிறோம்.

அன்பன்,
வெங்கட்

# அறிவிப்பு

கொரோனா வைரஸ் பரவல் பாதிப்பின் காரணமாக நமது தமிழ்ப் பள்ளியைச் சில வாரங்களாக முடக்கியிருக்கிறோம்.
அனைத்து மாணவ மாணவிகளும் தமிழ்ப் பள்ளியையும், அங்கு சந்திக்கும் நண்பர்களையும் பிரிந்து வாடுவார்கள் என நினைக்கிறேன்.
இயல்பு வாழ்க்கை திரும்ப இன்னும் சில மாதங்களாவது ஆகும்போலத் தெரிகிறது. எனவே இணைய வழிக் கல்வியைத் தொடங்குவதற்கான முயற்சியில் மும்முரமாய் ஈடுபட்டுள்ளோம். கூடிய விரைவில் அதற்கான அறிவிப்பு வெளியிடுவோம்.

எப்போதும் ஒத்துழைப்பு தருவதுபோல, இணையவழி வகுப்பிலும் அனைத்து பெற்றோர்களின் ஒத்துழைப்பைக் கோருகிறேன்.

திரு. சுந்தரராஜன்
தலைமை ஆசிரியர்

# பள்ளி நிகழ்வுகள்

## மார்ச்

| | |
|---|---|
| 15/03 | - பள்ளி விடுமுறை (Covid-19) |
| 22/03 | - பள்ளி விடுமுறை (Covid-19) |
| 29/03 | - பள்ளி விடுமுறை (Covid-19) |

## ஏப்ரல்

ஏப்ரல் 15-க்கு மேல் இணையவழி வகுப்புகள் தொடங்க திட்டமிட்டுள்ளோம்.

மேலதிக விவரங்கள் விரைவில்.

# குறள் இனிது



**முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்**
**ஆக்கம் பலவுந் தரும்.**

வரும் பகையை எதிர்க்கும் வலிமை இருப்பினும், அத்துடன் அரணைச் சார்ந்து போரிடும் வாய்ப்பும் இணையுமானால் பெரும்பயன் கிட்டும்.

**அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்.**

பயப்பட வேண்டியதற்குப் பயப்படாமல் இருப்பது மூடத்தனம்; பயப்படுவது அறிவாளிகளின் செயல்

பள்ளி மாணவர்கள் தங்களுக்குப் பிடித்த குறள்களைத் தேர்வு செய்து ஒவ்வொரு இதழிலும் நம்மிடம் பகிர்வர்.

# அறிவோம் தமிழா

## தொல்காப்பியரின் பேச்சு வகைகள்:

| | |
|---|---|
| பேசு | - Speak |
| பகர் | - Speak with Data |
| செப்பு | - Speak with Answer |
| கூறு | - Speak categorically |
| உரை | - Speak meaningfully |
| நவில் | - Speak rhymingly |
| இயம்பு | - Speak musically |

| | |
|---|---|
| பறை | - Speak to reveal |
| சாற்று | - Speak to declare |
| நுவல் | - Speak with introduction |
| ஓது | - Speak to recite |
| கழறு | - Speak with censure |
| கரை | - Speak with calling |
| விளம்பு | - Speak with a message |

# சாதனை மனிதர்கள்



**உங்கள் பெயர் என்ன?**

வணக்கம், என் பெயர் **செல்லத்துரை ராஜேந்திரன்.**

**நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?**

கணிப்பொறி வல்லுநராக சாண்டன்டேர் பேங்க்'இல் மில்டன் கீய்ன்ஸ் கிளையில் வேலை செய்கின்றேன். நான் கடந்த 17 வருடமாக இங்கிலாந்தில் வசித்து வருகிறேன்.

**உங்கள் அலுவலகப் பணி போக வேறு எதில் நீங்கள் உங்களை இந்தச் சமூகத்துடன் ஈடுபடுத்துகிறீர்கள்?**

மில்டன் கீய்ன்ஸ்'இல் வசிக்கும் நண்பர்கள் இணைந்து எங்களால் இயன்ற உதவிகளைச் செய்கிறோம். அதே போல இந்தியாவில் வசிக்கின்ற என்னுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் உதவியோடு எங்களால் முடிந்த சிறு உதவிகளை மக்களுக்கும் சமூகத்துக்கும் செய்து வருகின்றோம்.

**இப்படிப்பட்ட அவரச / இயந்திர உலகத்தில் அடுத்தவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் எங்கே எப்படி வந்தது?**

2007-ம் வருடம் என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருவர், பள்ளிச் சிறுவன் ஒருவனுக்கு அவசர அறுவை சிகிச்சை செய்ய வேண்டி பணம் கேட்டார். நான் ஒரு சிறு தொகையை அனுப்பி வைத்தேன். சில வாரங்களுக்குப் பிறகு அந்தச் சிறுவன் குணமடைந்த புகைப்படம் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சில நாட்களுக்கு பிறகு அந்தச் சிறுவன் மற்றும் பெற்றோர் என்னிடம் பேசினார்கள். இந்த ஒரு சம்பவம் என்னை வெகுவாக பாதித்தது, ஏனென்றால் நான் அனுப்பிய தொகை ஒவ்வொரு மாத இறுதியிலும் என்னுடைய நண்பர்களோடு கேளிக்கைக்குச் செலவிடுவது. அன்றுமுதல், என்னால் முடிந்த ஒரு சிறு தொகையை ஒவ்வொரு வருடமும் நல்ல காரியத்துக்குச் செலவிடுவது என்று முடிவுசெய்து இன்று வரைக்கும் செய்து வருகின்றேன். மில்டன் கீய்ன்ஸ்'இல் வசிக்கும் என்னுடைய நெருங்கிய நண்பர்கள் சிலரும் இதில் இணைந்து உள்ளார்கள்.

## உங்களின் இந்த உன்னத நோக்கத்திற்கு ஊக்கமளிப்பவர்கள் யார்? எவ்விதத்தில்?

பெற்றோர்கள், மனைவி, உறவினர்கள் மற்றும் நண்பர்கள் இதற்கு உறுதுணையாக இருக்கிறார்கள். சில நேரங்களில் நமது தேவைக்கு இல்லையென்றாலும் இந்த நல்ல காரியத்துக்குப் பணம், பொருள் தந்து நாம் உழைப்பதை யாரும் தடுக்க மாட்டார்கள், மாறாக இயன்ற உதவிகளைச் செய்கிறார்கள்.





## கஜா புயல், மகிழன்கோட்டை இவைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.

மகிழன்கோட்டை நான் பிறந்து, வளர்ந்த சிறிய அழகான கிராமம். என்னுடைய அப்பா, அம்மா, உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் அங்கு வசித்து வருகிறார்கள். 16 நவம்பர் 2018 அன்று கஜா புயல் காவேரி டெல்டா பகுதிகளை வெகுவாக பாதித்தது. புயல் கரையைக் கடந்தது எங்கள் கிராமத்துக்கு வெகு அருகில். அன்று காலை என்னால் கிராம மக்கள் யாரையும் தொடர்புகொள்ள முடியாமல் தவித்தது இன்று நினைத்தாலும் என் கண்கள் குளமாகின்றது. புயல் எங்கள் கிராமத்தைப் புரட்டி போட்டது அதிகமான வீடுகள், மரங்கள் பெரும் பாதிப்புக்குள்ளானது. எங்கள் கிராம மக்கள் வாழ்வாதாரத்தை இழக்க நேரிட்டது, புயல் எங்களை 30 வருடம் பின்னோக்கி இழுத்துச் சென்றுவிட்டது. வாட்ஸ்அப்'இல் நண்பர்கள் பகிர்ந்த மரங்கள் விழுந்து கிடந்த புகைப்படங்கள் பார்த்து காரில் உட்காந்து அழுதது நினைவுக்கு வருகிறது.







நண்பர் ஒருவர் தந்த யோசனையின் பேரில், இங்கிலாந்து நண்பர்களிடம் பணம் வசூல் செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயன்ற உதவிகளைச் செய்தோம். மேலும் கடந்த வருடம் விடுமுறையில் மகிழன்கோட்டை கிராமத்துக்கு சென்று 7500 (மா, பலா, கொய்யா, எலுமிச்சை, தேக்கு, சந்தனம், செம்மரம், வேம்பு மற்றும் புங்க) மரக்கன்றுகளை அனைத்து வீடுகளிலும் பொது இடங்களில் நட்டோம். இதன் மூலம் உதவி செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் மீண்டும் நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

இதைப் படிக்கும் நண்பர்களுக்கு மரக்கன்றுகள் வாங்குவது அல்லது பயிரிடுவது தொடர்பான விளக்கம்/உதவிக்கு என்னைத் தொடர்புகொள்ளலாம்.




## மற்றவர்களுக்கு நாம் உதவ வேறு என்னென்ன எளிய வழிகள் இருக்கின்றன?

மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் மட்டுமே போதும், ஆயிரம் வழிகள் தானே பிறக்கும். முதலில், எந்தெந்த வழியில் உதவி செய்ய இயலும் என்பதை முடிவுசெய்து பின் பணம், பொருள் அல்லது உழைப்பு மற்றும் கால அவகாசம் என நம்மால் முடிந்த, சரியான வழிகளைத் தேர்வு செய்யலாம். இதில் ஆர்வம் உள்ளவர்கள் இது பற்றி மேலும் அறிந்திட என்னைத் தொடர்பு கொள்ளலாம்.



## இது வரையில் நீங்கள் செய்ததில் உங்கள் மனதைக் கவர்ந்த சேவை எது?

உண்மையில் நாம் செய்வது காயத்திற்கு மருத்து போடுவது போன்றது மட்டுமே. அது வெகுவாக என்னைக் கவரவில்லை. மாறாக, ஏற்படாதிருக்க என்ன செய்வது எனும் எண்ணமே மேலோங்கி நிற்கிறது. சில சேவைகள் செய்யும்பொழுது மனம் நெகிழ்ச்சி அடைகிறது. அப்படி, கடந்த வருடம் விடுமுறையின்பொழுது எங்கள் குழந்தைகளோடு கிராமத்துக்கு அருகில் உள்ள ஒரு ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்துக்குச் சென்று சில மணிநேரங்கள் அவர்களோடு இருந்து, மதிய உணவு உண்டு வந்தோம்.



### ஏன்?

ஒவொரு முறையும் நாங்கள் இங்கிருந்து பணம் அனுப்பி அந்த குழந்தைகளுக்கு இயன்ற உதவிகளைச் செய்து வந்தோம். இம்முறை நேரில் சந்தித்தது எங்களுக்கும், குழந்தைகளுக்கும் மகிழ்ச்சியாக அமைந்தது.

## வளர்ந்து வரும் என் போன்ற பிள்ளைகளுக்கு நீங்க கூற விரும்பும் கருத்து என்ன?

1. உணவை வீணடிக்காதீர். உங்களுக்குத் தேவையான அளவு மட்டும் உணவை பரிமாறி, அனைத்தையும் உண்ணவும்.
2. உங்களுடைய ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் ஏதேனும் ஒரு பொது சேவை செய்யுங்கள். அது பணமோ, பொருளோ அல்லது உங்களுடைய உழைப்பாகவோ இருக்கலாம். இந்த கடினமான நேரத்தில் மக்கள் கொரோனா வைரஸ் தாக்குதலில் இருந்து விடுபடவும், வைரஸ் தொற்று பரவாமல் இருக்கவும், இந்த கொரோனா வைரஸ் எதிர்த்துப் போராடவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.



கேள்விகள் - நமது நிருபர் மீனல்


# தமிழர் விளையாட்டுகள்


- புதிய தொடர்


*இப்பகுதியில், தமிழர்களின் பண்டைய விளையாட்டுகள் பற்றிய செய்திகள் திரட்டி நம்மோடு பகிர்கின்றனர் **நிலை:2B** வகுப்பு மாணவர்கள் மற்றும் வகுப்பாசிரியர்: **மீனா***

## 1.தாயக்கட்டை







### வரலாறு

சொக்கட்டான் விளையாட்டு மூவாயிரம் வருடம் பழமையானது.

மகாபாரதப்போர் காரணம் இந்த விளையாட்டு என்பதும், நள மகாராஜா சனியின் பிடியால் புட்கரனிடம் இந்த விளையாட்டில் சூதாடித் தோற்றதும் இதன் பழமைக்குச் சான்று.

### விதிகள்

பல விதமான கட்டங்கள் வரைந்து இரண்டு முதல் நான்கு பேர் வரை ஆறு காய்கள் வைத்து விளையாடலாம்.

தாயம் விழுந்தால் மட்டுமே ஆட்டம் தொடங்கி முதல் காயை நகர்த்தலாம்.

தாயம், ஐந்து, ஆறு மற்றும் பன்னிரண்டு விழுந்தால் மீண்டும் அவரே ஆட்டத்தைத் தொடரலாம்.

மலையில் சேரும் காய்களை வெட்ட முடியாது, அம்பலத்தில் ஆடும் காய்களை எதிராளி வெட்டலாம்.

### வெற்றி

எதிராளியின் காயை வெட்டினால்தான் உள்நுழையலாம். எல்லாக் காய்களையும் முதலில் அகம் சேர்ப்பவர் வெற்றி பெறுவார்.

### நன்மைகள்

கணிதம், வியூகம் மற்றும் கவனத்திறனை மேம்படுத்த இவ்விளையாட்டை விளையாடினர்.


- தொடரும்


# காட்சிப் பேழை


பள்ளி மாணவர்களின்
வீட்டுப்பாடங்கள், திட்டப்பணிகள்
உங்கள் பார்வைக்கு...

இந்த இதழில்: நிலை 1
மாணவர்கள்



# மார்ச் மாதம் பிறந்தநாள் கொண்டாடிய நம் பள்ளிப் பிள்ளைகள்

அடிப்படை நிலை:1

ஆதவ் நடராஜன்

ஆரிஷ் பார்த்

அடிப்படை நிலை:2

ஸ்ரீகிருஷ்ணவ் சாய்நாத்

அபினவ் செல்வகுமார்

நிலை:1

ஆதவ் ராஜ் செல்லதுரை

நிலை:2

ஆராதனா சிவஞானசெல்வன்

ஷோனா விஜயகுமார்

நிலை:4

நீல் ஐயர்

நிலை:5

அர்ஷத் அஹமது

நிலை:7

சௌம்யா ராமநாதன்

பிள்ளைச்செல்வங்கள் அனைவருக்கும்

பிறந்தநாள் வாழ்த்துகள்!!

# தென்கச்சி கதைகள்

"ஒரு நல்ல நகைச்சுவை எப்படியிருக்கணும்?" என்பதற்கு ஒவ்வொருத்தர் ஒவ்வொரு மாதிரியான விளக்கத்தைக் குடுத்திருக்காங்க. ஆனா, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் குடுக்கிற விளக்கம் என்ன தெரியுமா? நகைச்சுவை அப்படீன்னா அடுத்தவங்களுக்குத் துன்பம் குடுக்காம இருக்கணுமாம், அடுத்தவங்க மனசைப் புண்படுத்தப்படாதாம்.

அவர் ஓர் உதாரணமும் கொடுக்கிறார்.

ஓர் ஏரி ஓரமா சின்ன பசங்க ரெண்டு பேர் நடந்து போய்க்கிட்டிருக்காங்க. அதுலே ஒருத்தன் பணக்கார வீட்டுப் பையன். இன்னொருத்தன் ஏழை. இவங்க ரெண்டு பேரும் இப்படி போய்க்கிட்டிருக்கும்போது, வழியிலே ஓர் இடத்துலே ஜோடி செருப்பு ஒன்னு இவங்க கண்ணுல பட்டுது.

ஒரு விவசாயி அந்தச் செருப்பை அங்கே விட்டுட்டு பக்கத்துலே இருந்த ஏரியிலே கை கால் கழுவிக்கிட்டிருந்தார். உடனே அந்தப் பணக்காரப் பையனுக்கு ஒரு யோசனை வந்துச்சு. அவன் சொன்னான் "டேய்! இப்ப ஒரு வேடிக்கை செய்யலாம். அந்தச் செருப்பு ரெண்டையும் தூக்கி எட்டத்துலே வீசி எறிஞ்சிடுவோம். அந்த ஆளு வந்து பார்த்துட்டு செருப்பைத் தேடி அல்லாடுவான். அங்கேயும் இங்கேயும் ஓடுவான். திரு திருன்னு முழிப்பான். அதை நாம ரசிக்கலாம். நல்ல தமாஷா இருக்கும்!" அப்படீன்னான்.

இப்படிச் சொல்லிப்புட்டு அந்தச் செருப்புகளைத் தூக்கப் போனான்.

"கொஞ்சம் பொறு" -ன்னான் அந்த ஏழைப் பையன். "ஏன்?" னு கேட்டான் இவன், இப்ப அந்த ஏழைப் பையன் சொன்னான்:

"நீ சொல்றது ஒன்னும் வேடிக்கை இல்லே! உன்னோட செருப்புத் தொலைஞ்சா உன் அப்பா உடனே உனக்கு வேறே செருப்பு வாங்கிக் குடுத்துடுவாரு. ஆனா அந்த ஆளுக்கு இந்தச் செருப்பு தொலைஞ்சா வேறே புதுசா வாங்கறதுக்கு, வாயையும் வயத்தையும் கட்டி பணத்தைச் சேர்க்க வேண்டியிருக்கும்! அதனாலே நான் ஒரு வேடிக்கை சொல்றேன். அது மாதிரி செய்! அது இன்னமும் தமாஷா இருக்கும்." அப்படின்னான்.

"சரி! சொல்லு!"னு இவன் சொன்னான்.

"செருப்பு ரெண்டும் அது இருக்கிற இடத்துலேயே இருக்கட்டும். உன் சட்டைப் பையிலேயிருந்து ஒரே ஒரு உரூபாய் நாணயத்தை எடுத்து அந்தச் செருப்பு மேலே - அதோட குதிப் பகுதியிலே வை. வச்சுட்டு நாம ரெண்டு பேரும் அந்த மரத்துக்குப் பின்னாடி மறைஞ்சி நின்னுக்குவோம். அப்புறம் பார் வேடிக்கையை!"ன்னான்.

அதே மாதிரி ஒரு உரூபாய் காசை செருப்பு மேலே வச்சுட்டு இவங்க மறைஞ்சி நின்னுக்கிட்டாங்க.

கொஞ்ச நேரத்துல அந்த விவசாயி வந்தார். கால்ல உள்ள மண்ணைத் தட்டிப்புட்டு செருப்பை மாட்டறதுக்குப் போனார். அங்கே இருந்த காசு கண்ணுலே பட்டுட்டுது! அவருக்கு ஆச்சரியமாப் போச்சு! அதைக் கையிலே எடுத்துப் பாத்தார். நாலுபக்கமும் திரும்பித் திரும்பிப் பாத்தார். கடைசியிலே ஆகாயத்தைப் பாத்தார்.

"ஆண்டவா! இது உன்னோட கருணைதான். நீதான் யாரோ புண்ணியவான் மனசுல தருமம் பண்ணற எண்ணத்தை உண்டாக்கியிருக்கே! அந்தப் புண்ணியவான் நல்லாயிருக்கணும்!" ன்னு வாழ்த்தி அந்தக் காசைக் கண்ணுலே ஒத்திக்கிட்டார்!

மறைஞ்சிருந்து பார்த்துக்கிட்டிருந்த ஏழைப் பையன் இப்பச் சொன்னான்:

"பார்த்தியா? உன்னைப் புண்ணியவான்னு வாழ்த்திட்டுப் போறார் அந்த ஆள்! அவருக்கும் சந்தோஷம். அதைப் பார்த்து நமக்கும் சந்தோஷம். உனக்கு ஒரு உரூபாங்கறது ஒன்னும் பெரிசில்லே. ஆனா அதனாலே நமக்குக் கிடைச்சிருக்கிற மகிழ்ச்சி ரொம்ப உயர்வானது!" அப்படின்னான். "வேடிக்கையும் கிண்டலும் இது மாதிரி அடுத்தவங்களுக்கு இடைஞ்சலா இல்லாமே இருக்கணும்" என்கிறார் கலைவாணர். ஆனா பாருங்க. அவருக்கே இடைஞ்சலா வர்ற விஷயங்களைக் கூட அவரு வேடிக்கையாத்தான் எடுத்துக்கிட்டார்.



ஒரு தடவை ஒருத்தர் கலைவாணர்கிட்டே வந்து "ஐயா, என் குழந்தை செத்துப் போச்சு!" ன்னு சொல்லி அழுதார். உடனே இவரு, அவருக்கு நூறு உரூபாய் பணம் குடுத்து "இந்தாங்க. அடக்கம் செய்ய இதை வச்சுக்குங்க!"ன்னு சொல்லி அனுப்பினார். ஒரு வருஷம் கழிச்சு மறுபடியும் அதே ஆள் வந்தார். இவரு மறந்திருப்பார்ங்கற நினைப்புலே, "அண்ணே. என் குழந்தை இறந்து போச்சுண்ணே!"ன்னார். இவரு மறுபடியும் நூறு உரூபாய் குடுத்து ஆறுதல் சொல்லி அனுப்பி வச்சார்.

ஏழெட்டு மாசம் கழிச்சு மறுபடியும் அதே ஆள் வந்தார். அவரு வாயைத் திறக்கறதுக்கு முன்னாடியே இவர் நூறு உரூபாயை அவரு கையிலே வச்சு, "போன ரெண்டு தடவைதான் குழந்தை செத்துப் போச்சு! இந்தத் தடவையாவது அதை சாகாமே காப்பாத்திடுங்க!"ன்னார். அதுக்கப்புறம் அந்த ஆள் வர்றதே இல்லையாம்!

# கவிக்குயில்



## ஏழை பூக்காரம்மா


சரம் சரமாய் அழகாக பூக்கள் இருந்தும்...
கணவனுக்கு மிகபிடிக்கும் என தெரிந்திருந்தும்...
மலை மலையாய் மனதுக்குள் ஆசை இருந்தும்
எடுத்துச் சூட துளியும் ஏனோ எண்ணமில்லை !!

அனைத்தையும் விற்றால் தான் பிள்ளைகளுக்கு உணவு!

- வெங்கட்

# மூளைக்கு வேலை

## 1 விலங்குகளை “க” வரிசையோடு இணை



| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ | ப் | பி | ள் | ல | க |
| ம | க | பு | ண | ர | கா |
| யி | ர | லி | கு | கீ | கி |
| கை | கே | கெ | கூ | னை | சி |
| கொ | ப | கா | க | ம | ரி |
| கோ | கௌ | ரை | ம | ழ | ப |



## 2 விடுகதைகள்

1. படபடக்கும், பளபளக்கும்; பண்டிகை வந்தால் வானில் பறக்கும். அது என்ன?

2. ஓர் அரண்மனையில் முப்பத்திரண்டு காவலர்கள். அது என்ன?

3. உணவை எடுப்பான், ஆனால் உண்ண மாட்டான். அவன் யார்?

4. காலையில் வந்த விருந்தாளியை மாலையில் காணவில்லை. அது என்ன?

5. கந்தல் துணி போர்த்தியவன், முத்துப் பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தான். அவன் யார்?

6. கடல் நீரில் வளர்ந்து, மழை நீரில் மடிவது என்ன?

7. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துகள். அது என்ன?

8. ஓயாமல் இரையும், இயந்திரமல்ல. உருண்டோடி வரும், பந்து அல்ல. அது என்ன?

9. காலையிலும் மாலையிலும் நெட்டை. மதியம் மட்டும் குட்டை. அது என்ன?


10. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல. வேகமாய் ஓடும் மான் அல்ல. கால்கள் உண்டு மனிதன் அல்ல. அது என்ன?

விடைகள் கீழே ...

விடைகள்:

1. படம்
2. முற்றம்
3. அன்பாயிரம்
4. குழந்தை
5. சிலந்தி
6. உப்பு
7. வெண்டைக்காய்
8. கடல்
9. மூன்று
10. குதிரைவண்டி

# 3 குறுக்கெழுத்துப் போட்டி



**வலமிருந்து இடம்**

1 அன்பான கொஞ்சல் (3)
2 புலவர்களுக்குப் பரிசு (5)
3 சாப்பிடுவது எதற்கு (3)
4 சேர மன்னன் (10)
5 சரிந்து கொண்டிருக்கும் சந்தை (3)
6 முறிவல்ல, (3)
7 மண்டேலா போராடியது இதற்குத்தான் (4)
8 ஒரு நாளின் வெளிச்சமான பாதி (3)
9 நானும் _____ தான் (3)
10 புகைப்படம் (6)
11 நேர் நேர் (2)
12 நதிகளின் சங்கமம் (3)
13 இலக்கண வகை (3)
14 கூடையில் மீன்(4)
15 வீடு வந்த மகள் (5)
16 யுவதியின் உடை (3)
17 என்னை எப்படிச் சொல்வேன் (2)
18 இங்கேயும் பட்டுப்புடவை உண்டு (6)
19 முன் இல்லை (2)
20 இயற்கையாய் ஈன்றெடுத்தல், வலி இல்லாமல் (8)
21 நம் சேவாலியர் (3)
22 இது வீட்டில் செய்தால் படிப்பில் உதவும் (7)
23 கொட்டினால் மழை (3)

**மேலிருந்து கீழ்**

1 காவலாளியின் விளி (3)
2 சங்கை வைத்து....? (4)
6 நடிகர் விக்ரம் கோபமாய், வெட்டியானாய் (5)
7 நாலாபுரமும் தண்ணீர் (2)
8 ஈறு கேட்ட கனி (2)
10 மகிழுந்து ஓட்ட இது பின்பற்று (2,3,5)
15 மிகுதிக்குறிப்பு (2)
16 வேலைக்காரி (2)
17 நான், நீ, எல்லாரும் (2)
19 உறுதியாக இருத்தல் (5)
20 இயக்குனர் தம்பி, பெரியார் வழியில் (3)
24 ஆசை (3)
25 அதிகமான மகிழ்ச்சி, ஈரில்லை (4)
26 மகுடம் (2)
27 சென்னைக்கு அருகில் ரயில் சந்திப்பு (7)
28 ஜாக்கிரதை (4)
29 ராசிகளில் ஒன்று (4)
30 காளைகள் பூட்டி வலம் வரலாம் (6)
31 வரிகள் உள்ள மிருகங்கள் (4)
32 எதிர் (2)
33 பரோட்டா செய்ய இது தேவை (4)
34 படி, ஈரில்லை (2)

# என்னைப் பற்றி நான்...



பெயர்:

ஆன்டணி

தமிழ்ப்பள்ளியில் நான்:

பெற்றோர், வாயிற்காப்போன் மற்றும் நிர்வாக உறுப்பினர்.

பொழுதுப்போக்கு:

தொலைக்காட்சி, இறகு பந்து, வெயில் காலங்களில் கைப்பந்து.

முதல் மகிழுந்து:

VW Golf

எனது கனவு விடுமுறை:

விடுமுறையே கனவாதான் இருக்கு.

பிடித்த இசை:

டப்பாங்குத்திலிருந்து ஜாஸ் வரை

இது இல்லாமல் என் வாழ்க்கை இல்லை... ஏன்:

மனைவி என்று சொல்ல ஆசை ஆனாலும் "இது" என்று கேட்டதால் சோறு! வயிறு என்று ஒன்று உண்டு. என்ன செய்ய.

பிடித்த வார நாள்:

ஒய்வு நாட்கள் அனைத்தும்.

விரும்பிப்படிக்கும் எழுத்தாளர்:

விரும்பி படித்த எழுத்தாளர் சிட்னி ஷெல்டன்.

நான் சந்திக்க விரும்பும் நபர்:

என் தந்தை வழி தாத்தா. கெடுவாய்ப்பாக, அவரை நான் சந்தித்ததில்லை.

என்னைப்பற்றி யாரும் அறியாத ஒன்று:

அப்படி ஒன்றும் இல்லை. நான் ஒரு திறந்த புத்தகம் 😊

* கெடுவாய்ப்பாக - Unfortunately

## நிறைவாக.....

**இந்த மின்னிதழ் உங்களுக்கு ஒரு இனிய அனுபவத்தைத் தந்திட நாங்கள் முழுமையாய் முயற்சித்துள்ளோம். அதன் விளைவாய் உங்களுக்கு ஒரு புதிய சுகானுபவம் கிட்டியிருக்கும் என நம்புகிறோம்.**

**கெடுவாய்ப்பாக, எதேனும் உங்கள் மனதை பாதித்திருந்தாலோ, மனம் புண்படும்படி அமைந்திருந்தாலோ வருந்துகிறோம். உங்களது புகார்களை/ மேலதிக கருத்துகளைக் கீழ்க்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். அதுபோல், உங்கள் பாராட்டுகளையும் எங்களிடம் பகிர்ந்து எங்களுக்கு உற்சாகமூட்டலாமே.**

**நீங்கள் விரும்பும், தமிழ் உலகிற்குப் பயனளிக்கும் வேறு பல விடயங்கள் இந்த மின்னிதழில் சேர்த்திட எங்களைத் தொடர்புகொள்ளுங்கள். செவி சாய்ப்போம். நன்றி.**

## வேண்டுகோள்:

**இந்த மின்னிதழ் நம் மொழி சார்ந்தும் நம் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், தன்னார்வலர்கள் ஆகியோரது படைப்புகளைத் தாங்கியும் வலம் வரும்.**

**உங்களது படைப்புகள் இதில் இடம் பெற ஆசிரியர் பக்கம் பகுதியிலுள்ள எங்கள் குழுவில் ஒருவரையோ அல்லது கீழே உள்ள மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளுங்கள்.**

**மின்னிதழ் குழு தொடர்புகொள்ள:**

emagazine@mktamil.org

http://www.mktamil.org/

https://www.facebook.com/groups/MKTamilSchool

